செ. கு. எண்: 131 நாள்: 28.07.2020

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் அறிக்கை - 28.7.2020

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், கீழவீரராகவபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. காளிமுத்து என்பவரின் மகன் திரு. ஐயப்பன் என்பவர் தாமிரபரணி ஆற்றில் குளிக்கச் சென்ற போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கழனிப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. சுப்பிரமணியன் என்பவர் விஷப்பூச்சி கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுராந்தகம் வட்டம், வடக்குபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முரளி என்பவரின் மகன் சிறுவன் தரணேஷ், திரு. ரவி என்பவரின் மகன்கள் சிறுவன் ராஜா மற்றும் சிறுவன் ஆகாஷ் ஆகிய மூன்று சிறுவர்கள் குளத்து நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், பனப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகன் செல்வன் கோவர்தனன் என்பவர் சுற்றுலா சென்ற இடத்தில் கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சோளிங்கர் வட்டம், புதூர் மதுரா மாலையமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. தேசன் என்பவரின் மகள் செல்வி அஷ்வினி, திரு. சங்கர் என்பவரின் மகன் செல்வன் தமிழரசன் மற்றும் திரு. உலகநாதன் என்பவரின் மகள் செல்வி ஜெயஸ்ரீ ஆகிய மூவரும் வேடந்தாங்கல் ஏரியில் குளிக்க சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், குளக்காட்டாங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. லட்சுமணன் என்பவரின் மகன் திரு. பாண்டீஸ்வரன் என்பவர் ஆற்றில் குளிக்கும் போது, நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், முஞ்சிறை கிராமத்தைச் சேர்ந்த திரு. விஜீமோன் என்பவர் இயக்கிய JCB இயந்திரத்தின் மீது பாறை விழுந்ததில், பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிள்ளியூர் வட்டம், மிடாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வின்சென்ட் என்பவரின் மகள் செல்வி விர்ஜின் பெர்னதெத் என்பவர் தனியார் வாகனம் மோதிய விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் திரு. ராமச்சந்திரன் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகாசி வட்டம், தாயில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துகண்ணன் என்பவரின் மகன் திரு. கார்த்திகேயன் என்பவர், இயற்கை உபாதை கழிக்கச் சென்ற போது, எதிர்பாரத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வெம்பக்கோட்டை வட்டம், கங்கர்செவல் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சுப்புலட்சுமி என்பவரின் கணவர் திரு. சேதுராஜ் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அரியப்பம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரன் என்பவரின் மகன் திரு. நவீன்குமார் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சத்தியமங்கலம் வட்டம், புஞ்சைபுளியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவகணேஷ் என்பவரின் மகன் சிறுவன் கவியாணேஷ் என்பவர் பள்ளி வாகனத்தின் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு வட்டம், வீரப்பன்சத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குமார்(லேட்) என்பவரின் மகன் திரு. மணிகண்டன் என்பவர் திருமூர்த்தி அணையில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சத்தியமங்கலம் வட்டம், சுங்ககாரன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அய்யாவு என்பவரின் மகன் திரு. ரங்கசாமி என்பவர் தீ விபத்து ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அந்தியூர் வட்டம், முகாசிபுதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நல்லாக்கவுண்டர் என்பவரின் மகன் திரு. ரத்னகுமார் என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், மாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சிவசங்கரி மற்றும் அவரது கணவர் திரு. கணேசன் ஆகிய இருவரும் சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கழுவன்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தனபாலன் என்பவரின் மகன் செல்வன் நவீன்

மற்றும் திரு. முருகன் என்பவரின் மகன் செல்வன் சபரிதரன் ஆகிய இருவரும் ஊரணியில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், பனங்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்பவரின் மகன் திரு. ரகுராஜ் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கோரணம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. அர்த்தனாரி என்பவரின் மகன் செல்வன் மணிகண்டன் என்பவர் விவசாய கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மேட்டூர் வட்டம், குட்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பச்சமுத்து என்பவரின் மகன் திரு. செல்வம் என்பவர் வாகன விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

எடப்பாடி வட்டம், செட்டிமாங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தன் என்பவரின் மகன் திரு. உத்திரகுமார் என்பவர் மாடு முட்டி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மேட்டூர் வட்டம், கூணாண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ரஞ்சிதா என்பவரின் கணவர் திரு. கனகராஜ் (எ) கருமலை என்பவர் கட்டடத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், ஒரகடம் பகுதியில் ஏற்பட்ட சாலை விபத்தில் திரு. கோபி என்பவரின் மகன் செல்வன் விக்னேஷ் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், கருத்தனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. சாத்தப்பன் என்பவரின் மகன் திரு. கோவிந்தராஜ் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 31 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 31** நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**